**ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும்**
**பயிற்சி இயக்ககம், சென்னை–6**

மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களில் காலியாக இருந்த விரிவுரையாளர்கள் பணியிடங்களை நிரப்ப அரசாணை வழங்கப்பட்டது. அதன் அடிப்படையில் ஆசிரியர் தேர்வு வாரியம் பணி நாடுநர்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெற்று, போட்டித் தேர்வு நடத்தி, தெரிவு செய்யப்பட்ட 139 பேர் கொண்ட பட்டியலினை ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககத்திற்கு அனுப்பியுள்ளது. இவர்கள் இனவாரி சுழற்சி மற்றும் தர அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். சான்றிதழ் சரிபார்ப்பின்போது தேவையான சான்றிதழ்களை சமர்ப்பிக்கத் தவறிய 8 பணி நாடுநர்களின் முடிவுகள் ஆசிரியர் தேர்வு வாரியத்தால் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. உடற்கல்வி இயக்குநர்களுக்கான தெரிவுப் பட்டியல் இன்னும் ஆசிரியர் தேர்வு வாரியத்திடமிருந்து பெறப்படவில்லை. பெறப்பட்ட பின்பு அவர்களுக்கான கலந்தாய்வு நடத்தப்படும்.

விரிவுரையாளர் பணியிடங்களுக்கு பாடவாரியாக தெரிவு செய்யப்பட்டு, 05.01.2010 அன்று மாண்புமிகு துணை முதல்வர் அவர்களால் நியமன ஆணை பெற உள்ளவர்களின் எண்ணிக்கை விவரம்:

| வ. எண். | பாடம் | நியமன ஆணை பெறவுள்ள விரிவுரையாளர்கள் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | தமிழ் | 21 |
| 2. | ஆங்கிலம் | 22 |
| 3. | கணிதம் | 19 |
| 4. | இயற்பியல் | 12 |
| 5. | வேதியியல் | 15 |
| 6. | தாவரவியல் | 6 |

| | | |
|---|---|---|
| 7. | விலங்கியல் | 12 |
| 8. | வரலாறு | 16 |
| 9. | புவியியல் | 8 |
| மொத்தம் | | 131 |

**இயக்குநர்**